**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**
**கலைப்பீடம்**
**முதலாம் வருடப் பரீட்சை – பருவம் II – 2018**
**SOC 1202 - உளவியல்க் கொள்கைகள்**
**இரண்டு (02) மணித்தியாலங்கள்**
**நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக**

---

01. "கட்டமைப்புவாதம் மற்றும் செயற்பாட்டுவாதம் ஆகிய இரண்டு கோட்பாடுகளும் மனித மனத்தினைக் கற்பதற்குப் பயன்படும் அகநோக்கு முறைகளாகும்" இக் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா? காரணங்களைத் தருக.

02. மனித நடத்தையின் சாதாரண (Normal) மற்றும் அசாதாரணப் (Abnormal) பண்புகளை விளங்கிக் கொள்வதில் உயிரியல் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை, மனித நடத்தையினைப் பிறழ்வுநிலைக்கு இட்டுச் செல்லும் நான்கு (04) காரணிகளின் துணையுடன் விளக்குக.

03. நீங்கள் பல்கலைக்கழக மதிப்பீட்டிற்காகத் (Assignment) தரவுகளைச் சேகரிக்க வயல் நிலத்திற்கு அருகில் நடந்து சென்று கொண்டிருக்கிறீர்கள், அப்பொழுது காளையொன்று உங்களைத் தாக்க வருகின்றது. மேற்கூறப்பட்ட சந்தர்ப்பத்தில், நீங்கள் எவ்வாறு எதிர்வினையாற்றி (reaction) உங்களைக் காப்பாற்றிக் கொள்வீர்கள் என்பதை James Lange கோட்பாடு மற்றும் Cannon Bard கோட்பாடு என்பவற்றுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

**04. ஒன்றில்,**

தனிநபர் ஆளுமை விருத்தியானது நேர்மறையானதாகவோ எதிர்மறையானதாகவோ புரொய்ட்டின் (Freud) உளப்பாலியல் வளர்ச்சிப் பருவங்களை (stages of psycho-sexual development) எவ்வாறு பயன்படுத்துகின்றது என்பதை உதாரணங்களைக் கொண்டு கலந்துரையாடுக.

**அல்லது**

'குழந்தைப் பருவம் முதல் முதிர் பருவம் வரையான வேறுபட்ட நிலைகளில் தனிநபரால் அடையாளச் சிக்கல்கள் (Identity crisis) அனுபவிக்கப்படுவதாக எரிக் எரிக்சனின் (Erik Erikson) உளப்பாலியல் விருத்திக் கோட்பாடானது விபரிக்கின்றது'. இக்கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? கலந்துரையாடுக.

பி.ப.பா

05. அதீத கோப உணர்வு (Aggressive) மற்றும் வன்முறையான வீடியோவைப் பார்ப்பதனால் பிள்ளைகளின் அதீத கோப உணர்ச்சி (Aggressive) நடத்தைப்பாங்கு விருத்தியில் ஏற்படும் தாக்கம் தொடர்பாக உளவியல் ஆய்வு ஒன்றினைச் செய்யுமாறு நீங்கள் உங்களது உளவியல் விரிவுரையாளரால் பணிக்கப்படுகிறீர்கள்.

i. நீங்கள் பயன்படுத்தும் ஆய்வு முறையினைக் கூறி, இவ் ஆய்வுமுறையை ஏன் தெரிவு செய்தீர்கள் என்பதை விளக்குக.

ii. தெரிவு செய்த ஆய்வுமுறையின் பலம் மற்றும் வரையறைகளை (limitations) விபரித்து, வரையறைகளைத் தவிர்ப்பதற்கான பரிந்துரைகளை வழங்குக.

06. மணியோசைக்கு இசைந்து ஒரு வாழைப்பழத்தை உண்ணுவதற்கு ஒரு குரங்கிற்கு எவ்வாறு பயிற்சி வழங்குவீர்கள் என்பதை ஒரு கற்றல் கோட்பாட்டைப் பயன்படுத்தி விபரிக்குக.

07. 'நம்முடைய புலனுணர்வு மற்றும் புலக்காட்சி என்பவற்றினூடாக நாம் வெளியுலகினை அறிந்து கொள்கின்றோம்' இக்கூற்றினை புலனுணர்வு அமைப்பு/உறுப்புக்களின் (sensory system/organs) தொழிற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி உதாரணங்களுடன் விபரிக்குக.

08. பின்வருவனவற்றுள் **இரண்டிற்குச் (02)** சிறுகுறிப்பு வரைக.

i. புலக்காட்சியின் ஒரே சீர்மை (Perceptual constancies)

ii. ஸ்கின்னரின் பரிசோதனை (பூனையுடனான பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு)

iii. அறிகை

iv. மாஸ்லோவின் தேவைப்படிநிலை (Maslow's hierarchy of needs)

*************